

செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பாக முஸ்லிம் சமுதாயத்தைச் சார்ந்த ஆதரவற்ற மற்றும் ஏழ்மை நிலையிலுள்ள மகளிருக்கு தன்னம்பிக்கை ஏற்படுத்தி வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு செங்கல்பட்டு மாவட்டத்தில் முஸ்லிம் மகளிர் உதவும் அவர்களின் சங்கத்தில் பதிவு செய்த 15 பயனாளிகளுக்கு சிறு தொழில் தொடங்குவதற்கு இணை மானியமாக முஸ்லிம் மகளிருக்கு ரூ.1.47 இலட்சத்திற்கான காசோலையினை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆ.ர.ராகுல் நாத், சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன் உள்ளனர்.

### நாமக்கல் மாவட்டம் வெண்ணந்தூர் ஒன்றியத்தில்

# 8 ஊராட்சிகளில் ரூ.2.04 கோடி மதிப்பில் திட்டப்பணிகள்!

## அமைச்சர் மா.மதிவேந்தன் துவக்கி வைத்தார்!

நாமக்கல், செப். 21 -

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் அருகேயுள்ள வெண்ணந்தூர் ஊராட்சிக்குட்பட்ட கட்டனாச்சம்பட்டி, மூலக்காடு, ஆலாம்பட்டி, பழந்தின்னிப்பட்டி, மாட்டுவேலம்பட்டி, அக்கரைப்பட்டி, மதியம்பட்டி மற்றும் தொட்டிப்பட்டி ஆகிய 8 ஊராட்சிகளில் ரூ. 2.04 கோடி மதிப்பீட்டில் 22 புதிய திட்டப் பணிகளுக்கு தமிழக வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியம், கட்டனாச்சம்பட்டி ஊராட்சியில் ஜல் ஜீவன் மிஷன் திட்டம் 2023 24 கீழ், அத்தி ப்பல கானூர் கிராமத்தில் ரூ.16.75 லட்சம் மதிப்பீட்டில் 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைக்கும் பணி, மூலக்காடு ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2023 24 கீழ், அம்மன் நகர் மெயின் வீதி மற்றும் முதல் குறுக்கு வீதியில் ரூ.20.23 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, சேது நகர் குறுக்கு வீதியில் 5.95 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, மசக்காளிப்பட்டி எரங்காடு குறுக்கு வீதியில் ரூ.3.56 லட்சம் மதிப்பில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, போயர் தெருவில் ரூ.9.37 லட்சம் மதிப்பீட்டில் கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணி, ஆலம்பட்டி ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2023 24 கீழ், அருந்ததியர் தெரு மகளிர் சுய உதவி குழு கட்டடம் முதல் மதுரை வீரன் கோவில் வரை ரூ.8.47 லட்சம் மதிப்பீட்டில் புதிய சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி உள்ளிட்ட பழந்தின்னிப்பட்டி, மாட்டுவேலம்பட்டி, அக்கரைப் பட்டி, மதியம்பட்டி உள்ளிட்ட ஊராட்சிகளில் ரூ.2.04 கோடி மதிப்பீட்டில் 22 புதிய திட்டப்பணி களை அமைச்சர் தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து, வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியம், தொட்டிப்பட்டியில் நடைபெற்று வரும் கலைஞரின் வரும் முன் காப்போம் மருத்துவ முகாமில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களையும் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் ஆர். எம்.துரைசாமி உள்ளிட்ட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



சென்னை தெற்கு மாவட்டம்,மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி மருத்துவ அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மதுரவாயல் தொகுதி மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர்.ஆர்.எம்.முபாரக் ஏற்பாட்டில் 145வது வட்ட செயலாளர் நெற்கை ப. ஆலன் தலைமையில் மாவட்ட பிரதிநிதி ஆர்.கர்ணல் முன்னிலையில் நெற்குன்றம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் உபகரணங்களை மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க. கணபதி,மண்டல குழு தலைவர் நொளம்பூர் வே.ராஜன் ஆகியோர் வழங்கினர். இந்நிகழ்ச்சியில் வட்ட செயலாளர்கள் எம்.ஜி. மாதவன்,எம். இ.ஸ்டாலின் எம்.சி, சி.சசிகுமார்,எம்.ரூபன், எம்.எம்.ஜெயரத்தினம் மற்றும் கழக நிர்வாகிகள்,அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.





